## அசைபோடும் சிறிய விலங்குகள் மற்றும் முயல்களின் ஒருங்கிணைந்த முன்னேற்றம் – மத்திய அரசு உதவி திட்டம்

### திட்டத்தின் குறிக்கோள்கள்

திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாவன:

- செம்மறியாடு / வெள்ளாடு / முயல் வளர்ப்போருக்கு செய்கைக்கு ஏற்ற ஊக்க உதவி அளிப்பதன் மூலம், இவற்றை தங்களுடைய பயன்பாட்டிற்காக மட்டும் வளர்க்காமல், தொழில் ரீதியாக வளர்த்தலை ஊக்குவித்தல்
- அளவிடக்கூடிய குறியீடுகள் கொண்டு தேர்வு முறை மூலம் நாட்டு இரக விலங்கினங்களின் உற்பத்தி தன்மையை மேம்படுத்துதல்
- ஒப்புக்கொள்ளப்படும் விதிகளின் அடிப்படையில், இறைச்சிக்கு இறுதி நுகர்வோரால் செலுத்தப்படும் விலையின் தகுந்த பங்கு, உற்பத்தியாளருக்கு கிடைக்கும் வகையில் சந்தைப்படுத்துதலை ஊக்குவித்தல்.
- உள்ளூரில், பொருள்களின் மதிப்பை கூட்ட ஊக்குவிப்பதன் மூலம், பண்ணையாளர் நல்ல வருமானத்தை பெற வழி செய்தல்.

### செயல்படுத்துவதற்கான காலம் மற்றும் செயல்பாட்டு பகுதிகள்

11 வது அம்ச திட்டத்தின் மீதமுள்ள காலத்தில், 24 மாநிலங்களில், அசைப்போடும் சிறிய விலங்குகளுக்காக 114 மாவட்டங்களிலும் மற்றும் முயல்களுக்காக 12 மாவட்டங்களிலும் இந்த திட்டம் செயல்படுத்தப்படும். மாநில அளவிலான ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு குழு, தேவைக்கேற்ப, புதிய பகுதிகளை அவர்களுடைய மாநிலத்தில் சேர்க்க முடியும்

### தகுதிகள்

- தனிப்பட்ட விவசாயிகள் மற்றும் சுய உதவி குழுக்கள் இத்திட்டத்தின் பயனாளிகள். இடையர்கள், பெண்கள் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

- தனிப்பட்ட விவசாயிகள், அரசுசாரா அமைப்புகள் மற்றும் கம்பெனிகள் அசைபோடும் சிறிய விலங்குகள் மற்றும் முயல்கள் ஆகியவற்றின் இனப்பெருக்க பண்ணைகளை அமைக்க உதவி பெறலாம். இவற்றுள், சிறு பிராணி வளர்ப்புக்காக விவசாயக் குழுக்களை ஏற்கனவே அமைத்துள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**வட்டியில்லா கடன் மீதான வரையறுகள் மற்றும் திட்ட செலவுகள்**

***வெவ்வேறு செயல்பாட்டிற்க்கான வட்டியில்லா கடன் மீதான வறையறு மற்றும் திட்ட செலவுகள் கீழே வருமாறு***

| **வ.எண்** | **கூறு** | **மொத்த நிதி முதலீடு ( ரூபாய் லட்சங்களில்)** | **உதவியின் வகைமுறை** |
|---|---|---|---|
| 1 | செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகள் வளர்ப்பு (40+2) | 1.00 | முதலீட்டில் 50% வட்டியில்லா கடனாக வழங்கப்படும் (அதிகப்பட்சமாக ரூ. 50,000/- வரை) |
| 2 | செம்மறியாடு மற்றும் வெள்ளாடு இனப்பெருக்க மந் தைகள் (500+25) | 25.00 | முதலீட்டில் 50% வட்டியில்லா கடனாக வழங்கப்படும் (அதிகப்பட்சமாக ரூ.12.50 லட்சம்) |
| 3 | முயல் வளர்ப்பு | 2.25 | முதலீட்டில் 50% வட்டியில்லா கடனாக வழங்கப்படும் (அதிகப்பட்சமாக ரூ. 1.125/- லட்சங்கள் வரை) |

**நிதியளிக்கும் வகைமுறை**

- *தொழில் முனைவோர் பங்களிப்பு* - வளர்ப்பு மந்தைகளுக்கு குறைந்தபட்சமாக 10 % மற்றும் கால்நடை இனப்பெருக்க மந்தைகளுக்கு முதலீட்டில் 25% ஆக இருக்கும்.
- *வட்டியில்லா கடன்* – மொத்த முதலீட்டில் 50 % வரை (மேலே சுட்டிக்காட்டப்பட்ட படி அதிகபட்ச நிதியுதவி)
- வங்கி கடன் – மீதமுள்ள தொகை

மேலே சுட்டிக்காட்டியிருப்பதை விட முதலீடு அதிகமாக இருக்கும்பட்சத்தில், தொழில்முனைவோர், கூடுதலான அளவெல்லையாக அந்த பணத்தை கொண்டு வரலாம் அல்லது அதை கடனாக வங்கி அளிக்களாம்

**கடனோடு இணைக்கப்படுதல்**

இந்த திட்டத்தின் கீழ் உதவி பெறுவது என்பது கடனோடு இணைக்கப்பட்டதாகவும், தகுதிபெற்ற நிதி நிறுவனங்களால் திட்டத்தின் ஒப்புதல் ஆணையையும் பொறுத்து இருக்கும்.

**தகுதிபெற்ற நிதி நிறுவனங்கள்**

- வணிக வங்கிகள்
- வட்டார ஊரக வங்கிகள்
- மாநில கூட்டுறவு வங்கிகள்
- மாநில கூட்டுறவு விவசாய மற்றும் கிராம ஊரக முன்னேற்ற வங்கிகள் மற்றும்
- தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வங்கி (நபார்ட்)-யிலிருந்து மறுநிதி / இணை-நிதியை பெறுவதற்கான தகுதியை உடைய பிற நிறுவனங்கள்.

**திட்டத்தை செயல்படுத்துதல்**

1. 1. **வளர்ப்பு மந்தைகள்**

**அ. செயல்பாட்டு உதவி அளிப்பதற்கு அரசு சாரா அமைப்புக்களை தேர்ந்தெடுத்தல்**

- இத்திட்டத்தின் கீழ், செயல்பாட்டு உதவி அளிப்பதற்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் வேலை செய்வதற்கு தயாராக இருப்பவர்கள் அல்லது அசைபோடும் சிறிய விலங்குகளின் செயற்களத்தில் செயல்படும் அரசுசாரா அமைப்புகளிடமிருந்து திட்டங்களை மாநில கண்காணிப்புக் குழு பெறும். இந்த அரசு சாரா அமைப்புகள் விருப்பமுள்ள பயனாளிகளை குழுக்களாக அமைக்கும்; உள்ளூரில் உள்ள கால்நடை துறையின் உதவியுடன் பயிற்சி அளிக்கும்; உள்ளூர் வங்கிகளிலிருந்து இந்த குழுக்களுக்கு அல்லது அதன் உறுப்பினர்களுக்கு கடன் பெற வசதி ஏற்படுத்தித் தரும்; மேலும் இவை இடுப்பொருட்கள் வாங்குவதற்கும் விலங்கினங்களை விற்பதற்கும் உதவி செய்யும்.
- செயல்பாட்டு உதவி அளிப்போர்ர்களை மாநில கண்காணிப்புக் குழு தேர்ந்தெடுத்து ( ஒவ்வொரு மாவட்டத்தில் குறைந்தது 2 – 3 ) அவர்களுக்கு செயல்பாட்டு பகுதிகளை ஒதுக்கும்.
- பயனாளிகளை தேர்ந்தெடுத்தல், அவர்களை குழுக்களாக அமைத்தல், அவர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் வங்கிகளோடு இணைத்தல் போன்றவற்றை உள்ளூர் கால்நடை பராமரிப்பு துறை மற்றும் நபார்ட் வங்கியின் மாவட்ட முன்னேற்றத்திற்கான மேலாளரின் வழிக்காட்டுதலுடன் செயல்பாட்டு உதவி அளிக்கும் நிறுவனங்கள் செய்ய முடியும்.
- இந்த திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் செம்மையாக செயல்பட்டு வரும் சுய உதவி குழுக்களையும் கருத்தில் கொள்ளலாம்.

**ஆ. வங்கிகளால் கடனுக்கான ஒப்புதல் ஆணை**

பயிற்சி முடிந்தவுடன், உள்ளூர் வங்கிகளால் கடனுக்கான ஒப்புதல் ஆணைக்காக செயல்பாட்டு உதவி அளிக்கும் நிறுவனங்கள் ஏற்பாடு செய்வார்கள். ஒப்புதல் ஆணைக்காக தொழில்முனைவோர்/அரசுசாரா அமைப்புகள் விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து தங்களுடைய நிதியளிக்கும் வங்கிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும். வங்கிகள் தங்களுடைய

விதிகளின் படி திட்டங்களை மதிப்பீடு செய்து, கடன் வழங்க முடிவு செய்தவுடன் வட்டியில்லா கடனுக்கான ஒப்புதல் ஆணைக்காக, அவ்வங்கிகளின் நிர்வாக அலுவலகங்கள் மூலமாக நபார்டின் வட்டார அலுவலகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

விரும்பினால், வங்கிகள் வட்டியில்லா கடனை நபார்ட் வங்கியிலிருந்து பெறுவதற்கு முன்பே கடனை வழங்கலாம். இந்த சூழலில், வட்டியில்லா கடன் தொகையை பெறும்வரை, கடன் அளிக்கப்பட்ட முழு தொகை மீதான வட்டியை வங்கிகள் விதிக்க முடியும். வட்டியில்லா கடன் தொகையை பெறும்பொழுது, அவர்களுடைய கடன் கொண்டிருக்கும் பகுதியளவுக்கு மட்டும் வட்டி விதிக்க முடியும். வட்டியில்லா கடன் தொகை மீது எந்த வட்டியும் விதிக்கப்படமாட்டாது. எனினும், இவை அணைத்தும் அரசாங்க நிதி ஒதுக்கீடு மற்றும் வங்கிகளின் திட்ட ஒப்புதல் ஆகியவற்றை பொருத்து மாறலாம்.

**2. ஒப்புதல் ஆணை மற்றும் வட்டியில்லா கடன் அளித்தல்**

நபார்டு வட்டார அலுவலகம் பயனாளிகளின் திட்டங்களை ஆராய்ந்து, விதிமுறைகளுக்கு ஒத்து போகின்றவைகளை மட்டும் மாநில அளவிலான ஒப்புதல் ஆணை மற்றும் கண்காணிக்கும் குழுவிற்கு அனுப்பிவைக்கும். ஆரம்பக் காலத்தில், பயனாளிகளிடமிருந்து திட்டங்கள் வரும்போதெல்லாம் கூடும் கண்காணிப்புக் குழு, பின்னர் திட்டத்தின் வளர்ச்சியை மறுபார்வை செய்வதற்கு காலாண்டு / அரையாண்டு அளவில் கூடும்.

நபார்டிலிருந்து வட்டியில்லா கடனுக்கான கூறுகளை பெற்ற ஒரு மாதத்திற்குள் முதல் தவணையை வங்கிகள் வழங்கும். சில காரணங்களை முன்னிட்டு வங்கிகள் கடனை வழங்காதிருக்கும் பொழுது, ஒரு மாதத்திற்குள் நபார்டின் உரிய வட்டார அலுவலகத்திற்கு வட்டியில்லா கடனைத் திரும்பவும் செலுத்தும். இம்மாதிரியான திருப்பி செலுத்துதலில் தாமதம் ஏற்படும்

பொழுது மைய வங்கி கிளையால் இது பெற்ற தேதியிலிருந்து வங்கியானது ஆண்டிற்கு 10 % வட்டியை செலுத்தும்.

**3. செலுத்துவதற்கான காலம் மற்றும் கடனை மீட்சி பெறுதல்**

பணப்புழக்கத்தை சார்ந்து கடனை திருப்பி செலுத்துவதற்கான காலம் இருக்கும். அதிகப்பட்சமாக 9 வருடங்கள், இதில் சலுகை காலமாக 2 வருடங்கள் உள்ளடங்கியிருக்கிறது. வட்டியில்லா கடன் தொகை உள்ளடங்கியதான கடன் முழுவதையும் நபார்டுக்கு திருப்பி செலுத்துவதற்கான அட்டவணையை வங்கி சமர்ப்பிக்கும். கடனை வசூல செய்யத் தேவையான உரிய நடவடிக்கைகளையும் வங்கிகள் எடுக்கலாம். வசூல் செய்த தொகையை ஆறு மாத கால அடிப்படையில் நபார்டுக்கு வங்கிகள் திருப்பி செலுத்தும்.

**4. வட்டியின் அளவு**

வங்கியின் அதிகாரபூர்வ திட்டம் மற்றும் ஆர்.பீ.ஐ வழிகாட்டிகளின் படி கால வைப்புகள் கடனின் மீதான வட்டியின் அளவு இருக்கும்.

**5. கடன் வழங்க தேவைப்படும் ஜாமின் (செக்யுரிட்டி)**

ஆர்.பீ.ஐ நியமனங்கள் பின்பற்றப்படும்.

**6. கண்காணித்தல்**

- ஆறு மாத கால அடிப்படையில் வளர்ச்சியை தேசியளவிலான மத்திய கண்காணிக்கும் குழு ஆய்வு செய்யும்.
- தேவையை கருத்தில் கொண்டு காலாண்டு / அரையாண்டு அடிப்படை மீதான வளர்ச்சியை மாநில அளவிலான குழு ஆய்வு செய்யும்.
- கடனளிக்கும் வங்கிகள் தேவைக்கேற்ப அடிக்கடி ஆய்வு நடத்தி, மாநில கண்காணிப்புக் குழுவுக்கு குறிப்புகளை அளிக்க வேண்டும்.

**செம்மறியாடு/வெள்ளாடு/முயல் வளர்க்க தகுதிவாய்ந்த மாவட்டங்கள்.**

| வ. எண் | மாநிலம் | செம்மறியாடு / வெள்ளாடு | முயல் |
|---|---|---|---|
| 1 | ஆந்திரா பிரதேசம் | அடிலாபாத், சித்தூர், குண்டூர், கிழக்கு மற்றும் மேற்கு கோதாவரி, கம்மம், நல்கொண்டா, நிஜாம்பாத், பிரகாசம், ரங்காரெட்டி, விசாகபட்டினம், வாரங்கல் | |
| 2 | அருணாச்சல பிரதேசம் | லோஹித், சுபான்சிரி கீழ்பகுதி, மேற்கு சியாங் | **தவாங்** |
| 3 | அஸ்ஸாம் | பர்பெடா, தேமாஜி, தீப்ருகார், ஜோர்ஹட், கம்ருப், லகிம்பூர், நகோன், நல்பரி | |
| 4 | பீகார் | அராரியா, பங்கா, பாகல்பூர், கிழக்கு சாம்பரன், கடிஹர், கஹகரியா, முசபர்பூர், புர்னியா, சிடமர்ஹி | |
| 5 | சத்தீஸ்கார் | டான்டேவடா, ஜஷ்பூர், ராய்பூர், ராய்கார் | |
| 6 | குஜராத் | பாவ்நகர், டஹோத், ஜாம்நகர், கச், பஞ்ச்மஹால், ராஜ்கோட், சபர்கந்தா,சுரேந்திரநகர் | |
| 7 | ஹிமாச்சல் பிரதேசம் | சம்பா, மண்டி, கங்ரா | குல்லு, சிம்லா |
| 8 | ஜ&கா | பாரமுல்லா, தோடா, கதுஅ, ராஜுரி,உதம்பூர் | |
| 9 | ஜார்கண்ட் | கிரிடிஹ், ஹசரிபாக், ராஞ்சி | |
| 10 | கர்நாடகா | பெல்காம், சித்ரதுர்கா,குல்பர்கா, கோலார், மண்டியா, ராய்ச்சூர், டும்கூர் | |
| 11 | கேரளா | இடுக்கி, கண்ணூர் | திருவனந்தபுரம், எர்ணாகுளம் |

| | | | |
|---|---|---|---|
| 12 | மத்திய பிரதேசம் | சாடர்பூர், ஜ்ஹாபு, சிவபுரி, சிதி | |
| 13 | மகாராஷ்டிரா | அஹமதுநகர், பீட், துலே,நாசிக், புனே, சாங்லி, சதாரா, சோலாப்பூர், யவத்மல் | |
| 14 | மணிப்பூர் | | இம்பால் கிழக்கு & மேற்கு |
| 15 | மேகாலயா | | ரி போய் |
| 16 | மிசோராம் | | அய்ழால் |
| 17 | ஒரிஸ்ஸா | குர்தா, ராய்கடா | |
| 18 | ராஜஸ்தான் | அஜ்மீர், பார்மர், பாரத்பூர், பில்வாரா, பிகானீர், சுரு, ஜெய்பூர், ஜெய்சால்மர், ஜலூர், நாக்வர், பாலி, சிகார், சிரோஹி, உதய்பூர் | |
| 19 | தமிழ்நாடு | ஈரோடு, கிருஷ்ணகிரி, நாகபட்டினம், சிவகங்கை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, விருதுநகர், வேலூர் | |
| 20 | திரிபுரா | | மேற்கு திரிபுரா |
| 21 | உத்ராஞ்சல் | டேஹ்ரி கார்வால் | பிதொராகர் |
| 22 | உத்தரபிரதேசம் | அலிகார், எடாஹ், ஷரவாஸ்டி, சிடாபூர் | |
| 23 | மேற்கு வங்காளம் | பங்குரா, புர்ட்வான், முர்ஷிதாபாத், நாடிய, புருலியா, 24 பரகனஸ், வடக்கு & தெற்கு. | டார்ஜிலிங் |

***மூலம் : <u>www.nabard.org</u>***